இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே, நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை; தமக்கென்று இறப்பதுமில்லை. வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம். ஏனெனில், இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார்.. (உரோ 14:7-9)



# அருட்சாதனக் கொண்டாட்டங்களில் அனைவரும் கலந்துகொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி

## பேராயர் அலுவல அறிக்கையின் சுருக்கம்

**கோலாலம்பூர்:** மாண்புமிகு பிரதமர் டான் ஸ்ரீ முஹைதீன் யாசின் அவர்கள் 2020 ஆகஸ்ட் 28=ஆம் தேதி அறிவித்தபடி, நடமாட்டக் கட்டுப்பாடு மீட்புக்கால ஆணையானது 2020 டிசம்பர், 31 வரை நீடிக்கப்பட்டுள்ளதையொட்டி அருட்சாதனக் கொண்டாட்டங்களுக்கான புதுப்பிக்கப்பட்ட விதிமுறைகளை பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் சுருக்கத்தை வெளியிடுவதில் இறைத்தூதன் மகிழ்கிறது.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் நெருக்கடி கால நிவாரண பணிக்குழுவின் ஆலோசனைக்கிணங்க, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், அருட்சாதனக் கொண்டாடங்களுக்கான வழிகாட்டுதலில் பின் தளர்வுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

### I.I வயது வரம்புகளும் அதிக உடல்சார்ந்த ஆபத்துக்கு உட்பட்டவர்களும்

கடந்த செப்டம்பர் 4-ம் திகதியிடப்பட்ட அறிக்கையின்படி நமது வழிபாட்டு தளங்கள் அனைத்தும் மீண்டும் திறக்கப்படும் வேளையில், அதிக உடல் சார்ந்த ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், மூத்த குடிமக்கள். 12 வயது மற்றும் அதற்குக் குறைவான குழந்தைகள் வழிபாட்டுகளில் கலந்து கொள்ள **ஊக்குவிக்கப்படவில்லை.** வழிபாட்டுத் தலங்களில். நமது சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாப்பதே முக்கிய முன்னுரிமை நோக்கமாக இருந்தது.

எனவே, பங்குத்தந்தை பங்கின் பாதுகாப்பு பணிக்குழுவின் உதவியுடன், பொது சுகாதார எச்சரிக்கைகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும், மேலும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்க இதுபோன்ற அதிக உடல்நிலை ஆபத்து உள்ளவர்களுக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்து தொடர்ந்து கல்விபுகுட்ட வேண்டும்.
பங்குத்தந்தை திருப்பலிக்கு வர முடிவெடுத்தவர்களுக்கு கூடுதல் நிபந்தனைகளை விதிக்கலாம். இத்தகையோரின் நன்மைக்காக மாற்று ஏற்பாடுகளை பங்குத்தந்தை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

### I.2 மலேசிய குடிமக்கள் அல்லாதவர்

மலேசிய குடிமக்கள் அல்லாத வெளிநாட்டவர் இனிவரும் காலங்களில் திருப்பலியில் பங்கெடுக்கலாம், அவ்வாறே இதர பங்கு நடவடிக்கைளிலும் இவர்கள் கலந்துகொள்ளலாம்.

### I.3 இறப்பு

இறப்பு இறுதிச் சடங்கு திருப்பலிகளுக்கு, பொது திருப்பலிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தளர்வு போலவே பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையில் வரம்பு எண்ணிக்க இல்லை. ஆனாலும் சமூக இடைவெளி மற்றும் பிற பொது சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

### I.4 திருமணங்கள்

கடைசியாக ஆகஸ்ட் 1, 2020 அன்று புதுப்பிக்கப்பட்ட "இஸ்லாமிய அல்லாத வழிபாட்டு மற்றும் மத திருமண கொண்டாட்டங்கள்" குறித்த SOP நடைமுறை யில் உள்ளது. அதிகபட்சம் 20 நபர்களுக்கு (அருட்பணியாளர் மற்றும் பிற பணியாளர்கள் உட்பட) மேல் இருக்கக் கூடாது எனும் கட்டுப்பாடு தொடர்கிறது. எதிர்காலத்தில் இந்த நெறிமுறையில் பேராயர் மாற்றம் செய்தால் பங்குகளுக்கு அறிவிக்கப்படும்.

### I.5 நற்கருணை வழங்குதல்

திருப்பலிக்குப் புறம்பே, வயோதிகர்களுக்கு, நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குவதில் ஏற்படவிருக்கும் நோய்தொற்று ஆபாயத்திலிருந்து முன்னணி பணியாளர்களான அருட்பணியாளர்களையும் நற்கருணை பணியாளர்களையும் பாதுகாக்கும் நோக்கத்தை முன்னிட்டு, பேராயர் மறைமாவட்டத்தின் ஆலோசக அருட்பணியாளர் குழுவைக் கலந்தோலோசித்து, பின்வரும் முடிவை எடுத்துள்ளார். இது பங்குத் தந்தையின் ஆலோசனை மற்றும் முடிவுக்கும் உட்பட்டது.

#### அ )தனிப்பட்டோர் சந்திப்பு

பெரும் நோயுற்ற தனிப்பட்டோருக்காகப் பங்கில் பாவமன்னிப்பு மற்றும் நற்கருணை அருட்சாதனங்களுக்கு அ.தி.ச. பொறுப்பாளரோடு இணைந்து ஏற்பாடுகள் செய்யலாம்.

#### ஆ) சிறப்பு நற்கருணை பணியாளர்களை நியமித்தல்

இத்தகைய நோயாளிகளுக்கான சிறப்பு அருட்சாதன வழிபாட்டுக்கு உதவ திடகாத்திரமான இளையோர் நியமிக்கப்படலாம். இயன்றவரை நோயாளிகளின் குடும்ப உறுப்பினராக இருப்பது சிறப்பு.

#### இ) பெரும் நோயுற்றோருக்கு சிறப்பு திருப்பலி

பங்குத்தந்தை பெரும் நோயுற்றோருக்காகத் தனி திருப்பலிக்கு ஏற்பாடு செய்யலாம். ஆனாலும் கூடுதல் பாதுகாப்பு அம்சங்களைக் கடைபிடிக்க வேண்டும். சமூக இடைவெளி என்பது ஒரு மீட்டர் அல்லாமல் இரு மீட்டராக இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

#### ஈ) இல்லங்களில் நற்கருணை வழங்குதல்

ஒரு சிறப்பு நற்கருணை பணியாளர் நாள் ஒன்றுக்கு ஒரு நோயாளிக்கு மட்டுமே நற்கருணை வழங்க வேண்டும். மேலும், ஒவ்வொரு வாரமும் இவர்களுக்கு நற்கருணை வழங்க இயலாது என்பதை நோயாளிகளுக்கு முன்கூட்டியே தெரிவிப்பது நல்லது.

### I.6 முதியோருக்கான புகுமுக அருட்சாதன வகுப்பு, மறைக்கல்வி, உருவாக்கப்பயிற்சிகள் & கூட்டங்கள்

இந்த நடமாட்டக் கட்டுப்பாடு மீட்பு காலத்தில், முதியோருக்கான புகுமுக அருட்சாதன வகுப்பு, மறைக்கல்வி, உருவாக்கப்பயிற்சிகள் & கூட்டங்கள் யாவும் பங்குத்தந்தையின் ஆலோசனைக் கொப்ப மீண்டும் செயல்பட அனுமதி வழங்கப்படுகிறது. ஆனாலும் பொது பாதுகாப்பு அம்சங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

### I.7 அ.தி.ச. கூட்டங்கள்

பங்குத்தந்தையின் ஆலோசனைக்கேற்ப அ.தி.ச. கூட்டங்கள் மீண்டும் தொடங்கப்படலாம். இருப்பினும் நோயுற்றவர்கள் இக்கூட்டங்களில் கலந்து கொள்வதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

### I.8. நிர்ணநிக்கப்பட்ட பணி நெறிமுறைகளையோட்டிய (SOP) கல்வியறிவு

பங்குத்தந்தையும் பங்கு பாதுகாப்பு நடவடிக்கை பணிக்குழுவும் தொடர்ந்து மக்களுக்கான உடல்நல பாதுகாப்பு குறித்து விளங்கமளிப்பதோடு பாதுகாப்பு அம்சங்கள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக கிருமிகொல்லி திரவத்தால் கைகளை சுத்தம் செய்யதல், சுவாசக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல், பொது கழிவறைகளைப் பயன்படுத்துவதில் கவனம் போன்றவை.

### 2.0 திருத்தொண்டர் பொனவெஞ்சர் இராயப்பன் நியமணம்

திருத்தொண்டர் பொனவெஞ்சர் இராயப்பன் அவர்கள் செப்டம்பர் முதலாம் திகதி முதல் கிள்ளான், புனித லூர்து அன்னை பங்கில் அவரது மேய்ப்புப் பணியைத் தொடர நியமணம் பெற்றுள்ளார்.

### 3.0 திருத்தொண்டர் அட்ரியன் இங் நியமணம்

திருத்தொண்டர் அட்ரியன் இங், இவர் மலாக்கா- ஜோகூர் மறைமாவட்டத் தின் நிரந்தர திருத்தொண்டராவார். தற்போது ஆறு மாதக் காலத்திற்கு பல்கலைக்கழ மாணவ்களுக்கான மேய்ப்புப் பணிகளைத் தொடர காஜாங், திருக்குடும்பப் பங்கில் பணிக்கு அமர்த்தப் பட்டுள்ளார்.

### 4.0. அருட்பணியாளர்களின் ஆண்டு தியானம்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அனைத்து அருட்பணியாளர்களும் அவர்களது ஆண்டு தியானம் மற்றும் ஒடுக்கத்தை செப்டம்பர் 21 முதல் 24 வரை மேற்கொள்வர். இவர்களை தொடர்ந்து இறைவேண்டலில் நினைவுகூர பங்கு மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### 5.0 திருத்தைலத் திருப்பலி

ஆண்டுதொறும் கொண்டாடப்படும் திருத்தைலத் திருப்பலி இவ்வாண்டு பொது நடமாட்டக்கட்டுப்பாடு ஆணையின் காரணத்தால் நடைபெறவில்லை. இத்திருப்பலி எதிர்வரும் 24 செப்டம்பர் அன்று காலை 10.30க்கு, கோலாலம்பூர் புனித அந்தோணியார் பங்கு ஆலயத்தில் கொண்டாடப்படும். இத்திருப்பலியில் பொதுமக்கள் கலந்துகொள்ள இயலாது எனினும், சமூக ஊடகத்தின் வாயிலாக திருப்பலியில் கலந்து கொள்ளலாம்.

# அன்னை மரியே! காயப்பட்ட இந்த இவ்வுலகைப் பராமரித்தருளும்

**வத்திக்கான்:** கி.பி. 450-ஆம் ஆண்டில், எருசலேமில், கட்டப்பட்ட புனித அன்னாள் ஆலயம், அன்னை மரியா பிறந்த வீட்டின் மீது அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இந்த ஆலய நேர்ந்தளிப்பு நிகழ்விலிருந்து, அன்னை மரியாவின் பிறப்பை, விழாவாகக் கொண்டாடும் வழக்கம் திருஅவையில் துவங்கியது என த் திருஅவை பாரம்பரியம் கூறுகிறது.



அன்னை மரியாவின் பிறப்பு விழாவான, செப்டம்பர் 08, கடந்த செவ்வாயன்று, காயப்பட்ட இந்த இவ்வுலகைப் பாதுகாக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்னை மரியாவின் பரிந்துரைக்காக மன்றாடினார்.

அன்று தமது டுவிட்டர் செய்தி வழியாக, அன்னை மரியாவிடம் மன்றாடியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "மரியே, இயேசுவைப் பராமரித்த அன்னையே, காயப்பட்ட இந்த உலகையும், உமது தாய்மைக்குரிய பாசத்தால் பராமரித்தருளும்" என்ற சொற்களை, அச்செய்தியில் பதிவுசெய்திருந்தார்.

### அன்னை மரியாவின் பிறப்பு

இந்த விழா, முதன்முதலாக கீழை வழிபாட்டுமுறை திருஅவையில் கொண்டாடப்பட்டது. அங்கர்ஸ் ஆயரான புனித மவுரில்லியுஸ் அவர்கள், 425-ஆம் ஆண்டு தனக்கு கிடைத்த இறைச்செய்தியின்படி, கன்னி மரியா செப்டம்பர் 8-ஆம் திகதி பிறந்தார் என அறிவித்தார். இதுவே, கன்னி மரியாவின் பிறப்பு விழாவை செப்டம்பர் 8-ஆம் தேதி கொண்டாடும் வழக்கத்தை உருவாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

1671-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி போர்த்துக்கீசிய வர்த்தகர்கள் தமிழகத்தின் வேளாங்கண்ணியில் கரை சேர்ந்ததால், ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 8-ஆம் தேதி, வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை விழா கொண்டாடப்படுகிறது என்பது மற்றொரு வரலாறு.

மேலும், இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும், அன்னை மரியாவின் பிறப்பு விழாவானது, செப்டம்பர் 08-ஆம் தேதி, பெண் குழந்தைகள் நாள் சிறப்பிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

**கத்தோலிக்கத் திருஅவை உலகளவில் புலம்பெயர்ந்தோர், அகதிகள் தினத்தை 27 செப்டம்பர் அன்று நினைவுகூர்கிறது.**

கத்தோலிக்க மக்கள் அனைவரும் அநீதியாகத் துன்புறுத்தப்பட இவர்களுக்காகச் சிறப்பு இறைவேண்டல் செய்ய அழைக்கப்படுகிறார்கள்.

# நலவாழ்வு, பொருளாதாரம், சமுதாயம் மூன்றிலும் சமத்துவம் காண்போம்

**வத்திக்கான்:** நலவாழ்வு, பொருளாதாரம், சமுதாயம் என்ற மூன்று நிலைகளிலும் நெருக்கடியை சந்தித்துவரும் இன்றைய காலத்தில், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் புதிய முயற்சிகள் என்ற மூன்று கருத்தையும் சிந்திக்க கூடியிருக்கும் ஐரோப்பிய கருத்தரங்கு ஒன்றுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் நவர்கள் தமது செய்தியை அனுப்பியுள்ளார்.

இத்தாலியின் வடபகுதியில் அமைந்துள்ள Cernobbio நகரில் செப்டம்பர் 4,5,6 ஆகிய மூன்று நாள்கள் நடைபெறும் European House - Ambrosetti என்ற கருத்தரங்கிற்கு



திருத்தந்தை அனுப்பியுள்ள இச்செய்தியின் துவக்கத்தில், உலகெங்கும் பரவியுள்ள கொள்ளைநோய், நம்மில் எவரும் தனியே நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்பதை உணர்த்தியுள்ளது என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நமது சக்தியற்ற நிலையை வெளிச்சமிட்டுக் காட்டி, நாம் அனைவருமே ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை, உலகெங்கும் பரவியுள்ள ஒரு கிருமி நமக்கு உணர்த்தியுள்ளது என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### உலகம் என்ற இல்லத்தைப் பேணிக்காத்தல்

இத்தகையச் சூழலில், economics அதாவது, 'பொருளாதாரம்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லான oeconomia, அதாவது, உலகம் என்ற நம் இல்லத்தைப் பேணிக்காத்தல், என்ற சொல்லின் ஆழமான பொருளை நாம் உணர்ந்துள்ளோம், அதன் முக்கியத்துவத்தையும் நாம் புரிந்துகொண்டுள்ளோம் என்று திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

பேணிக்காத்தல் என்பது, இவ்வுலகையும், அதில் வாழும் அனைவரையும் எவ்வித பாகுபாடோ, புறக்கணிப்போ இன்றி காப்பது என்பதை உணரவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

செல்வம், பொருள் ஆகிய போலி தெய்வங்கள் மனிதர்களைப் புறந்தள்ளி, மனித மாண்பு பலியாவதால், ஏற்றத்தாழ்வுகளும், அதன் விளைவாக, வன்முறைகளும் பெருகி வருகின்றன என்ற கவலையை, திருத்தந்தையின் செய்தி வெளிப்படுத்துகிறது.

மனிதகுலம் சந்தித்துவரும் இந்த நெருக்கடிக்கு, அறிவியலும், தொழில்நுட்பங்களும் மட்டும் தேவையான தீர்வுகளைத் தராது என்பதை உணர்ந்துள்ள நாம், இவ்வேளையில், உதவவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், உலகெங்கும், பலர் காட்டியுள்ள தாராள மனம், ஓரளவு தீர்வுகளைத் தந்திருப்பது, மனதுக்கு நிறைவைத் தருகிறது என்று திருத்தந்தை இச்செய்தியில் கூறியுள்ளார்.

வருங்காலத்தைக் குறித்து சிந்திக்க கூடியிருக்கும் நீங்கள், பொருளாதாரம், முன்னேற்றம் என்ற கருத்துக்களை இன்னும் புதிய கண்ணோட்டங்களில் காணவும், யாரையும் ஒதுக்கிவிடாமல், யாரையும் விளிம்புகளுக்குத் தள்ளாமல், புதியதொரு சமுதாயத்தை உருவாக்கும் கருத்துக்களைச் சிந்திக்க கேட்டுக்கொள்கிறேன் என்று இச்செய்தியின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

# இகழ்வாரப் பொறுதுதல் இறைமக்களுக்கு அழகு!

"தவறு இழைப்பது மனிதம், மன்னிப்பது தெய்வீகம்." என்ற புகழ்பெற்ற இக்கூற்றை ஓர் ஆங்கில கவிஞரான அலெக்சான்டர் போப் கூறினார். பொதுக்காலத்தின் 24-ம் ஞாயிறு வாசகங்களை வாசிக்கும் நம்மில் அநேகருக்கு இவ்வாக்கியம் நினைவுக்கு வரலாம்.

நற்செய்தி வாசகத்தில் பேதுரு, ஆண்டவர் இயேசுவிடம் வந்து, ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கெதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனைமுறை அவரை மன்னிக்க வேண்டும்?, ஏழுமுறை மட்டுமா?" என்று கேட்கிறார். பேதுரு இப்படிக் கேட்பதற்குப் பின்னால் ஏதேனும் ஆதாயம் இல்லாமலில்லை. தான் ஏழுமுறை தவறு செய்யும் தன் சகோதர சகோதரியை மன்னிக்கிறேன் என்று சொன்னால், இயேசு தன்னைப் புகழ்வார் என்று பேதுரு நினைத்திருக்கக்கூடும். இயேசுவோ அவரிடம், "ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை" என்கிறார்.

அதாவது நாம் ஒவ்வொருவரும் நமக்கெதிராக தீங்குசெய்வோரை நிபந்தனை இல்லாமல் அன்புசெய்யவேண்டும் என்கிறார் இயேசு, "அதற்காக ஓர் உவமையையும் சொல்கிறார்.

மன்னியாமை - நம்மில் பலருக்கு நமக்கே தெரியாமல் உறங்கிகொண்டிருக்கும் ஒரு தீய குணம். நமக்கு எதிராக தவறு இழைத்தவர்களை மன்னிப்பதன் அவசியத்தையும் நன்மைகளையும் இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. பொதுவாகவே பிறரை மன்னிக்க தயங்குவோம். நமக்காக மட்டும் தான் இறைவனிடம் மன்னிப்பு கேட்போம். நமது இத்தகைய வெளி வேடத்தை இவ்வாசகத்தின் வழியாக இறைவன் தெள்ளத்தெளிவாக உணர்த்துகிறார்..

இயேசு கூறும் உவமையில் வரும் அரசர் போன்று கடவுள் நாம் செய்த தவறுகளை தாராளமாக, மனதார மன்னிக்கின்றார், ஆனால் நாமோ நம்மோடு வாழக்கூடிய சகோதர சகோதரிகள் செய்யும் சிறுசிறு தவறுகளை மன்னிக்கத் தவறிவிடுகின்றோம்.

கோபத்தோடு முறிந்த உறவுகள் இறுதிவரை 'வைராக்கியம்' எனும் போர்வையில் மறைத்து கல்லறைக்கும் போகிறோம். '*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை* ' என்கிற குறளின் வெளிச்சத்தில் மன்னிக்கும் குணம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியலாம்.

இரண்டாம் வாசகத்தில் நான் என்ற அகந்தை நீங்கி வாழ்ந்தாலும் இறந்தாலும் ஆண்டவர்க்கே உரியவர்களாய் இருக்கிறோம் என திருத்தூதர் பவுல் விளக்கும் போது, இவ்வளவு காலம் கோபத்தை சுமந்து கொண்டு வாழ்ந்த தவற்றை உணர முடிகிறது.

சீராக்கின் ஞான நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகமானது நாம் நமக்கெதிராகத் தீங்குசெய்பவர்களை மன்னிக்கிறபோது பெறும் நன்மையையும், அப்படி மன்னியாது இருக்கும்போது பெறும் தண்டனைகளையும் பெறுவோம் என எடுத்துரைக்கிறது.

7 முறை அல்ல, 70 முறை 7 முறை முழுமனதோடு மன்னிக்க வேண்டும் என நற்செய்தியில் வழியுறுத்துகிறார் ஆண்டவர் இயேசு. இதில் 'முழுமனதோடு' என்ற வார்த்தை தான் சிந்தனைக்குரியது. "உன்னை மன்னித்து விட்டேன் ஆனால் நீ செய்ததை ஒருபோதும் மறக்க மாட்டேன்" என்று நம்மில் பலர் சொல்வதை கேட்டிருப்போம்.விது அகந்தைக்குரியது. பிறர் குற்றங்களை மன்னித்து மறக்க வேண்டும். இதனால்தான் மறதி ஒரு நோய் அல்ல, மாறாக அது ஒரு கொடை என்று சொல்வதுண்டு. முழுமனதோடு மன்னிப்பு கேட்கவும், பிறரை மன்னிப்பதிலும் மறப்பதிலும் முனைப்பு காட்டவும் நற்செய்தி அழைக்கிறது. அந்தஅழைப்புக்கு பதில் கூற நம்மை நாமே தயார்படுத்துவோம்.

ஆம், நமக்கெதிராக தீங்கு செய்பவரை மனதார மன்னிக்கும்போது உடல் சுகம் மட்டுமல்ல, உள்ளசுகமும் பெறுகிறோம். எனவே, இறைவன் நம்மை அளவுகடந்த விதத்தில் மன்னிப்பது போல, நாமும் நம் உடன் வாழும் சகோதர சகோதரிகளை மனதார மன்னிப்போம்.

*எட்மண்ட் பல்தசார், செராஸ்.*

**பொதுக்காலம் 24-ஆம் ஞாயிறு**

சீராக் 27: 30- 28: 7
திபா 103: 1-2. 3-4. 9-10. 11-12 . .
உரோ 14: 7-9
மத் 18: 21-35

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**